# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:01** **தேதி:14.10.2014**

## போராடும் NLC ஒப்பந்த ஊழியருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்- தமிழ் மாநில மாநாடு அறைகூவல்

அன்பார்ந்த தோழர்களே,

NLC நிறுவனத்தின் பணி புரிந்து வரும் ஒப்பந்த ஊழியர்கள் அனைவரும் கடந்த 42 நாட்களுக்கு மேல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். இவர்களது நியாயமான கோரிக்கைகளை தீர்த்து வைக்காமல் இழுத்தடித்து வருகிறது.

தொடர்ச்சியாக செயல்பட வேண்டிய பணியிடங்களில் ஊழியர்களை சீனியாரிட்டி அடிப்படையில் நிரந்தரம் செய்வது, குறைந்த பட்ச ஊதியமாக மாதம் ரூ.25,000/- வழங்குவது, 20% போனஸ் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து NLC நிறுவனத்தில் பணி புரியும் ஒப்பந்த ஊழியர்கள் கடந்த 42 நாட்களுக்கு மேலாக உறுதியுடன் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அக்டோபர் 11-13 வரை திருச்சியில் நடைபெற்ற தமிழ் மாநில மாநாடு இவர்களின் போராட்டத்தை ஆதரித்ததுடன் போராடும் ஊழியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி இந்த பிரச்சனைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என NLC நிர்வாகத்தை கேட்டுக் கொண்டது.

ஊழியர்களின் பல கட்ட போராட்டங்கள், தொழிலாளர் நல இலாகாவின் தொடர்ச்சியான தலையீடு ஆகியவைகள் இருந்த போதும், ஊழியர்களின் பிரச்சனைகள் இன்று வரை தீர்வு காணப்படவில்லை.

**எனவே தொடர்ச்சியாக ஜனநாயக முறையில் போராடி வரும் ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளை தமிழக அரசும், NLC நிர்வாகமும் முறையாக பேசி தீர்வு காணப்படவேண்டும் எனவும், போராடும் நெய்வேலி ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஆதரவாக 16.10.2014 அன்று ஆர்ப்பாட்டம் நடத்துவது என BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில 7ஆவது தமிழ் மாநில மாநாடு கேட்டுக் கொண்டுள்ளது.**

எனவே தமிழகத்தில் உள்ள அனைத்து BSNL ஊழியர் கிளைசங்கங்களும் உடனடியாக திட்டமிட்டு இந்த போராட்டத்தை வெற்றிகரமாக்கிட வேண்டும் என தமிழ் மாநில சங்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்.)**
**மாநில செயலாளர்.**